**செய்தி வெளியீடு எண் : 2398** **நாள் : 02.12.2023**

**வங்கக் கடல் பகுதியில் உருவாகும் புயல் சின்னம் – கனமழை முதல் அதி கனமழை எச்சரிக்கை – முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் அவர்கள் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரை**

வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

தமிழ்நாட்டில், 01.10.2023 முதல் 01.12.2023 வரை 33.48 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 6 விழுக்காடு குறைவு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 01.12.2023 முடிய, 9 மாவட்டங்களில் அதிக மழைப்பொழிவும், 13 மாவட்டங்களில் இயல்பான மழைப்பொழிவும், 16 மாவட்டங்களில் குறைவான மழைப்பொழிவும், ஏற்பட்டுள்ளது.

இன்று (02.12.2023) காலை 8.30 மணி வரை 31 மாவட்டங்களில் 0.31 செ.மீ. மழை பெய்துள்ளது. 2 மழைமானி நிலையங்களில் கன மழை பதிவாகியுள்ளது. (திருநெல்வேலி மாவட்டம் – கண்ணடியான் அணைக்கட்டு – 8.38 செ.மீ., நாகப்பட்டினம் மாவட்டம் – கோடியக்கரை – 6.72 செ.மீ.)

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் உள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம், சென்னைக்கு கிழக்கு–தென்கிழக்கே சுமார் 510 கி.மீ. தொலைவிலும், நெல்லூருக்கு தென்கிழக்கே சுமார் 630 கி.மீ. தொலைவிலும், மசூலிப்பட்டினத்திற்கு (ஆந்திரா) தெற்கு–தென்கிழக்கே சுமார் 710 கி.மீ. தொலைவிலும் நிலை கொண்டுள்ளது என்றும்,

இது மேலும், மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்திற்குள் தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் புயலாக மாறக்கூடும் என்றும்,

பின்னர், இது வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஆந்திர பிரதேச மற்றும் அதனை ஒட்டியுள்ள வட தமிழக கடலோர பகுதியினை 04.12.2023 அன்று முற்பகல் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும்,

அதன் பிறகு வடக்கு திசையில் நகர்ந்து 05.12.2023 அன்று முற்பகல் தெற்கு ஆந்திர பிரதேசத்தின் கடற்கரையை நெல்லூர் மற்றும் மசூலிப்பட்டினத்திற்கும் இடையே புயலாக கரையை கடக்கக்கூடும் என எதிர்பார்ககப்படுகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

| | |
|---|---|
| 02–12–2023 | கனமழை – கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் (06 மாவட்டங்கள்) |
| 03–12–2023 | மிக கனமழை முதல் கனமழை – மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்கள். (08 மாவட்டங்கள்)<br>கனமழை – வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். (08 மாவட்டங்கள்) |
| 04–12–2023 | அதி கனமழை – திருவள்ளூர் (01 மாவட்டம்)<br>கனமழை முதல் மிக கனமழை – சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் வேலூர், மாவட்டங்கள். (07 மாவட்டங்கள்)<br>கனமழை – கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் (02 மாவட்டங்கள்) |

**மீனவர்களுக்கான எச்சரிக்கை**

| **தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள்** |
|---|
| ➢ அடுத்த 24 மணிநேரத்திற்கு மணிக்கு 45 முதல் 65 கிலோ மீட்டர் பலத்த காற்று |
| **தென்மேற்கு வங்க க் கடல் மற்றும் வடதமிழ்நாடு கடலோரப் பகுதிகள்** |
| ➢ தற்போது மணிக்கு 45 முதல் 65 கிலோ மீட்டர் பலத்த காற்று வீசுகிறது.<br>➢ 02.12.2023 அதிகாலை முதல் 50 முதல் 65 கிலோ மீட்டர் பலத்த காற்று வீசக்கூடும்.<br>➢ 02.12.2023 இரவு முதல் 60 முதல் 80 கிலோ மீட்டர் சூறைக்காற்று வீசக்கூடும்.<br>➢ 03.12.2023 மாலை முதல் 70 முதல் 90 கிலோ மீட்டர் சூறைக்காற்று வீசக்கூடும். |
| **மேற்கு மத்திய வங்கக்கடல் பகுதிகள் மற்றும் தெற்கு ஆந்திர பிரதேச கடலோர பகுதிகள்** |
| ➢ 02.12.2023 மாலை முதல் 35 முதல் 55 கிலோ மீட்டர் காற்று வீசக்கூடும்.<br>➢ 03.12.2023 காலை முதல் 55 முதல் 75 கிலோ மீட்டர் காற்று வீசக்கூடும்.<br>➢ 03.12.2023 மாலை முதல் 70 முதல் 90 கிலோ மீட்டர் சூறைக்காற்று வீசக்கூடும்.<br>➢ 04.12.2023 மாலை முதல் 80 முதல் 100 கிலோ மீட்டர் சூறைக்காற்று வீசக்கூடும். |
| **வட ஆந்திர பிரதேச கடலோர பகுதிகள்** |
| ➢ 04.12.2023 மாலை முதல் 45 முதல் 65 கிலோ மீட்டர் காற்று வீசக்கூடும். |

| |
|---|
| ➢ 05.12.2023 மாலை முதல் 55 முதல் 75 கிலோ மீட்டர் காற்று வீசக்கூடும். |
| **மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.** |

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின் பேரில் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

- பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு 29.11.2023 அன்று, நீர்த்தேக்கங்களில் நீர் மேலாண்மை செய்வது, 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும் எச்சரிக்கை தகவல்கள் வழங்குவது, பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளில் இருந்து பொதுமக்களை முன் கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பது, 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் மற்றும் இதர நிவாரண மையங்களை அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் வைத்திருப்பது, மழை நீரை அகற்ற நீர் இறைப்பான்கள் மற்றும் தடையின்றி குடிநீர் வழங்க மின்னாக்கிகள் (Generators) வைத்திருப்பது, பொதுமக்களுக்கு தடையின்றி பால் விநியோகம் மற்றும் பால் பவுடர் இருப்பு வைத்திருப்பது உள்ளிட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.
- மீன் பிடிப்படகுகள் 29.11.2023–க்குள் கரைக்குத் திரும்புமாறு மீனவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு கரையில் இருந்த 930 படகுகள் பாதுகாப்பாக கரைக்கு திரும்பியுள்ளன. கிழக்கு கரையில் இருந்த 57 படகுகள் கிருஷ்ணாம்பட்டினம், ஜூவாலதின் மற்றும் ராமய்யா பட்டினம் மீன்பிடி துறைமுகங்களில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 403 படகுகள் மேற்கு கரையில் பாதுகாப்பாக உள்ளன.
- ஆழ்கடலில் உள்ள மீனவர்கள் கரைக்குத் திரும்புமாறும், கடலுக்குள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கு எச்சரிக்கையும், பொது மக்களுக்கு புயல் குறித்த எச்சரிக்கையும் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 437 முன்னெச்சரிக்கை அமைப்புகள் மூலம் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.
- நீர்வள ஆதாரத் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனம், நெடுஞ்சாலைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, காவல் துறை உள்ளிட்ட முக்கியத் துறைகள் மேற்கொள்ள வேண்டிய மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைள் குறித்து 29.11.2023 அன்று துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
- கனமழையின் காரணமாக மழை நீர் தேங்கி பயிர்கள் பாதிப்பிற்குள்ளாகாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள விவாசாயிகளுக்கு அறிவுரை வழங்குமாறு வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

- மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு முப்படையினை தயார் நிலையில் வைத்திட முப்படையினைச் சார்ந்த அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
- எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய மாவட்டங்களுக்கு விரைந்துள்ளனர்.
- தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 200 வீரர்கள் கொண்ட 8 குழுக்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 225 வீரர்கள் கொண்ட 9 குழுக்கள் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள விரைந்துள்ளனர்.
- 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், **4,967** நிவாரண முகாம்களும் அனைத்து மாவட்டங்களிலும் தயார் நிலையில் உள்ளன.
- மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அளவிலான அவசரகால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் கூடுதலான அலுவலர்களுடன் இயங்குகின்றன.
- புயல், கனமழை தொடர்பான முன்னெச்சரிக்கை தகவல்கள் TNSMART செயலி மூலமாகவும், Twitter, Facebook உள்ளிட்ட சமூக ஊடகங்கள் மூலமாகவும் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 29.11.2023 – செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்திலிருந்து 1,500 கன அடி உபரி நீர் வெளியேற்றம் – பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் 5.23 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள்.
- 30.11.2023 – செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்திலிருந்து 6,000 கன அடி உபரி நீர் வெளியேற்றம் – 3.87 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள்.
- 30.11.2023 – புழல் நீர்த்தேக்கத்திலிருந்து 2,000 கன அடி உபரி நீர் வெளியேற்றம் – பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் 1.35 இலட்சம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள்.
- பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் தொடர்புடைய பகுதிகளில் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
- சென்னையில் 162 நிவாரண மையங்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளது. 1 நிவாரண முகாமில் 299 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற 504 நீர் இறைப்பான்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**பொதுமக்களுக்கான அறிவுரை**

**<u>செய்ய வேண்டியவை</u>**

**<u>ஆயத்த நிலை</u>**

- இந்திய வானிலை ஆய்வு மையம், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் (முகநூல், டுவிட்டர்), TNSMART செயலி மூலம் பகிரப்படும் அதிகாரப்பூர்வமான அறிவுரைகளை நம்பி பின்பற்ற வேண்டும்
- மின்கலம் (Battery) முறையாக பராமரிக்க வேண்டும்
- அதிகாரப்பூர்வ தகவல்களுக்காக வானொலி மற்றும் தொலைக்காட்சியை தொடர்ந்து கவனிக்க வேண்டும்
- பதற்றத்தை தவிர்த்து, அமைதி காக்க வேண்டும்
- சூறைக்காற்றினால் ஜன்னல்கள் மற்றும் கதவுகளுக்கு பாதிப்பு ஏற்படும். ஏனவே அவற்றை மூடி வைக்க வேண்டும்
- விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் ஆவணங்களை நீர் புகா வண்ணம் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.
- ஒரு சில நாட்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான உணவு, நீர் மற்றும் மருந்துகளை கையிருப்பில் வைக்க வேண்டும்.
- தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மாவட்ட நிருவாகத்தின் அறிவுரையின் பேரில் முன்கூட்டியே நிவாரண மையங்களுக்கு செல்ல வேண்டும்.
- மீனவர்கள், படகுகளுக்கு இடையே போதுமான இடைவெளி விட்டு படகுகளை பாதுகாப்பான இடத்தில் கட்டி வைக்க வேண்டும்

**புயல் நேரத்தில் பாதுகாப்பு குறிப்புகள்**

- கயிறு, மெழுகுவர்த்தி, கைமின் விளக்கு (torch light), தீப்பெட்டி, மின்கலங்கள் (batteries), மருத்துவ கட்டு (band aid), கத்தி, உலர்ந்த உணவு வகைகள், குடிநீர், மருந்துகள் மற்றும் குளுகோஸ் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய அவசர உதவி பெட்டகத்தை தயாராக வைத்திருக்க வேண்டும்.
- காய்ச்சிய குடிநீரை பருகவும்
- சுகாதாரமான உணவை உண்ணவும்
- புயல் தொடர்பான எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்ட பின்னரே வாகனத்தில் பயணிக்க வேண்டும்.
- வெளியில் இருக்கும் மக்கள், அருகில் உள்ள பாதுகாப்பு மையத்திலோ அல்லது பாதுகாப்பான கட்டடத்திலோ தங்க வேண்டும்.
- புயல் தொடர்பான எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை பாதுகாப்பாக இருக்க வேண்டும்
- அறுந்து விழுந்த மின்சார கம்பிகளின் மீது கவனம் வேண்டும்.
- சுற்றுப்புறத்தினை சுத்தமாக வைப்பதோடு கிருமிநாசினிகளை தெளிக்க வேண்டும்
- மழைக் காலங்களில் பாம்பு மற்றும் பூச்சி கடிகளை தவிர்க்க கையில் தடியை எடுத்து செல்ல வேண்டும்
- தேவையின்றி வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும்.

**செய்யக்கூடாதவை**

- மொட்டை மாடிகளில் நின்று வேடிக்கை பார்க்க வேண்டாம்.
- மரத்தடியில் வாகனங்களை நிறுத்த வேண்டாம்.
- புயல் கரையை கடக்கும் போது வாகனத்தில் பயணிக்க வேண்டாம்.
- புயல் கரையை கடக்கும்போது காற்றின் வேகம் திடீரென்று குறையும். அதனால் புயல் கடந்து விட்டதாக எண்ண வேண்டாம்.
- மந்த நிலைக்கு பின் மீண்டும் சூறைக் காற்று பலமாக வீசும். எனவே, இந்திய வானிலை ஆய்வு மையத்திலிருந்து புயல் கடந்து விட்டது என்ற அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் வரை வெளியில் செல்ல வேண்டாம்.
- யாரும் வதந்திகளை பரப்ப வேண்டாம்.
- மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம்.
- பழுதடைந்த கட்டடங்களுக்குள் நுழைய வேண்டாம்
- மரங்கள், மின் கம்பங்கள் மற்றும் மின் கம்பிகளுக்கு அருகில் நிற்க வேண்டாம்.
- ஈரமாக இருப்பின் மின் சாதனங்களை உபயோகிக்க வேண்டாம்

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களது ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு சி. அ. ராமன், இ.ஆ.ப., ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in